# சுதந்திரம் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது (1:11-14)

*நீங்கள் சிறு பிள்ளையாய் இருக்கையில் உங்களால் தூங்க இயலாத வகையில் மெய்சிலிர்க்கச் செய்த அல்லது உணர்வெழுச்சியூட்டக் கூடிய வகையில் ஏதேனும் நடந்திருந்தால் அது எவ்வாறு இருக்கும் என்பதைப் பெரும்பாலும் நீங்கள் நினைவுகூரலாம்.*

*பினேயாஸ் தூங்க இயலாதவனாக இருந்தான். அவன் சூரியனுக்கு முன்பாகவே எழுந்து விட்டான். அவன் தனது பையைக் கட்டி வைத்தவனாக, நாளைத் தொடங்கத் தயாராகப் படிக்கட்டுகளில் இறங்கிக் கொண்டிருந்தான். அது 1820ம் ஆண்டாயிருந்தது. பினேயாஸ் கடைசியாக ஒரு தீவை - தனது சொந்தத் தீவைக் காண வேண்டியவனாக இருந்தான்.*

*அந்தத் தீவைப் பினேயாஸ் தனது தாத்தாவிடமிருந்து ஒரு வெகுமதியாகப் பெற்றிருந்தான். புதிதாகப் பிறந்தவன் என்ற வகையில் பினேயாஸுக்கு, கனெக்டிக்கெட் பகுதியில் இருந்த ஐவி என்ற பெயர் கொண்ட தீவு ஒன்றின் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அவன் தன் சிறுவயதிலேயே, தனது தீவைப் பற்றித் தனது பெற்றோர்களிடமிருந்து கேள்விப்பட்டிருந்தான். அவர்கள் பினேயாஸிடம் நகைச்சுவையாக, அவன் ஒரு பணக்கார நிலச் சொந்தக்காரன் ஆன பிறகு தங்களை மறந்து விட வேண்டாம் என்று கெஞ்சுவது உண்டு. பினேயாஸ் தனது தீவைப் பற்றிக் கனவு கண்டு கொண்டும், அதைக் காணும் நாளை எதிர்பார்த்துக் கொண்டும் வளர்ந்தான். அவன் தனது சொந்த உடமையைக் கொண்டிருப் பான், அங்கு ஒரு நேர்த்தியான வீட்டைக் கட்டுவான், ஒரு பண்ணையை நடத்துவான், மற்றும் கால் நடைகளை வளர்ப்பான்.*

*உங்களுக்கு ஒரு தீவு சொந்தமாயிருந்ததென்றால், நீங்கள் அதைக் காண விரும்ப மாட்டீர்களா? ஆம் நீங்கள் விரும்புவீர்கள் தானே, மற்றும் பினேயாஸ் தனது தீவைப் பார்ப்பதற்குத் தன்னை அழைத்துச் செல்லும்படி தனது பெற்றோர்களிடம் கெஞ்சினான். கடைசியாக அவனது தந்தை (அதற்கு) ஒப்புக் கொண்டார். 1820ன் கோடைக்காலத்தில் தந்தையும் மகனு ம், பினேயாஸுக்குச் சொந்தமான தீவைக் காண்பதற்கான அவர்களின் பயணத்தைத் தொடங்கினார்கள்.*

*பயணத்தைத் தொடங்கியதில் இருந்தே பினேயாஸ், “நாம் நெருங்கி விட்டோமா? அடுத்த குன்றின் உச்சியில் இருந்து அதை நாம் காண*

*முடியுமா?" என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய தந்தையும், விரைவில் அங்கு இருப்போம் என்று தொடர்ந்து பதில் கூறிக் கொண்டிருந்தார்.*

*கடைசியில், அவனது தந்தை மரங்கள் அடர்ந்த ஒரு பகுதியைச் சுட்டிக்காண்பித்து, "அது அந்த மரங்களுக்கு அப்பால் உள்ளது" என்று கூறினார். பினேயாஸ் வண்டியிலிருந்து தாவிக் குதித்து, மரங்களை நோக்கி ஓடினான். அவன் எவ்விதத் தயக்கமும் இன்றிக் காட்டினுள் நுழைந்து, தனது தீவைக் காண்பதற்காக மரங்களினூடாக ஓடினான். கடைசியில் அவன் தெளிவானதொரு நிலப்பகுதிக்கு வந்தான். கடைசியாக அவனால் தனது ஐவித் தீவைக் காண முடிந்தது.*

*பினேயாஸ் கண்ட காட்சி அவனைத் திகைக்க வைத்தது. அவனது ஐவித்தீவானது பாம்புகள் நிறைந்திருந்த ஐந்து ஏக்கர் சதுப்பு நிலமேயன்றி வேறெதுவுமாய் இல்லாதிருந்தது. அவனது தீவு கனெக்டிக்கெட் மாகாணத் திலேயே, தேர்ந்தெடுக்கப்பட்ட நேர்த்தியான நிலம் என்று அவனுக்குப் பல ஆண்டுகளாகக் கூறப்பட்டு வந்தது, ஆனால் அது மதிப்பற்றதாக இருந்தது. அது ஒரு நகைச்சுவையாக மட்டுமே - ஒரு கொடூரமான ஏமாற்று வேலை யாக மட்டுமே - இருந்தது. பினேயாஸ் பின் திரும்பி தனது தந்தையைப் பார்த்தான், அவர் பெரும் சிரிப்பாய்ச் சிரித்துக் கொண்டிருந்தார்.*

*பினேயாஸ் சிரிக்கவில்லை. அவன் தனது உணர்வை ஒருக்காலும் மறக்கவில்லை. இழப்பின் உணர்வு அவனிடம் எஞ்சியிருந்தது. அவன் தான் ஏமாற்றப்பட்டதால் உணர்ந்த வெறுமையிலிருந்து ஒருக்காலும் மீளவில்லை. உண்மையில் அவன் மக்களை ஏமாற்றும் தொழில் ஒன்றைச் செய்பவனாக வளர்ந்தான்.*

*நீங்கள் அநேகமாக இந்தப் பினேயாஸ் என்ற பையனை P.T. - நில உரிமையாளர் அல்ல ஆனால் மேம்பாட்டாளர் என்ற வகையில் - அறிந்திருப்பீர்கள். இவர், "ஒவ்வொரு நிமிடத்திலும் ஒரு ஏமாற்றுபவன் பிறக்கின்றான்" என்ற புகழ் மிக்க சொல் வழக்கை ஏற்படுத்தினார், அந்தக் கூற்று எவ்வளவு உண்மையானது என்று காண்பிக்கும் வகையில் அவர் தம் வாழ்வைச் செலவிட்டார். பினேயாஸ் என்பவனே, பர்னம் & பெய்லியின் புகழ் பெற்ற சர்க்கஸ்ஸின் P. T. பர்னம் ஆனான்.*[1]

*சுயாதினம்/சுதந்தரம் ஒன்றைக் கனவு கண்டு, தனக்கு சுதந்திரமே இல்லையென்று கண்டறிந்த இளம் மனிதனைக் குறித்து நீங்கள் (இரக்க) உணர்வு கொள்வதில்லையா? உங்களில் சிலர், அது அவனுக்கு எதைப் போன்றிருக்கும் என்று அறிவீர்கள், ஏனெனில் நீங்களும் இதே போன்றே இழப்பினை அனுபவித்திருக்கலாம். உங்களுக்கென்றே சொந்தமான ஒரு தீவு பற்றி உங்களுக்கு வாக்குறுதியளிக்கப்படாதிருக்கலாம், ஆனால் நீங்கள் வேறு சிலவற்றை எண்ணிக் கொண்டிருக்கலாம். நடக்காத ஒன்றைப் பற்றி நீங்கள் கனவு கண்டிருக்கலாம்.*

*ஒருவேளை நீங்கள் யாரேனும் ஒருவருடன் திருமண வாக்குறுதி யளித்து, பின்னர் அவர்/அவள் அவற்றை மீறி, உங்கள் இதயத்தில் மாறாத தழும்பை விட்டுச் சென்றிருக்கலாம். ஒருவேளை நீங்கள் ஒரு ஸ்தாபனத் திற்கு உங்கள் வாழ்வின் மிகச் சிறந்த ஆண்டுகளை அளித்திருக்கலாம்.*

*அவர்கள் உங்களுக்கு அளித்திருந்த உறுதிப்பாட்டில் நீங்கள் நம்பிக்கை வைத்திருக்கலாம். நீங்கள் ஓய்வு (ஊதியத்தின்) மீது சார்ந்திருந்து, ஆனால் நீங்கள் உங்கள் வேலையை இழந்து போயிருக்கலாம் - அல்லது நீங்கள் உத்தியோகத்தினின்று ஓய்வு பெறக் கூடுமுன்பு நீங்கள் வேலை பார்த்த கம்பெனி திவாலாகியிருக்கலாம்.*

*உடைந்து போன வாக்குறுதிகளும், சிதைந்து போன கனவுகளும் கொண்டுள்ள உலகத்தில் நாம் வாழ்கின்றோம். இது, எப்பொழுதும் நான் நினைக்கின்றபடியாகவே எதிர்காலம் இராத ஒரு உலகமாக உள்ளது. இந்த உலகமானது நம்மை ஏமாற்றத்துக்குள்ளாக்கும் ''தீவுகளை'' நமக்கு வாக்களிக்கின்றது.*

*தேவனிடத்தில் (உள்ள) வாக்குத்தத்தங்கள் என்பது மாறுபட்டவை களாய் உள்ளன. தேவன் தாம் காத்துக் கொள்ளாத வாக்குத்தத்தமொன்றை ஒருக்காலும் ஏற்படுத்துகிறதில்லை. அவரது வாக்குத்தத்தங்கள் ஒருக்காலும் நடக்கத் தவறுவதில்லை. எபிரெயர் 10:23 தேவனைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றது: ''வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராய் இருக்கின்றார்.'' நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மீது நம்பிக்கை கொள்ள முடியும். தேவன் உண்மையுள்ளவராய் இருப்பதுடன், அவர் தாம் வாக்களித்த எதையும் செய்ய/நிறைவேற்ற வல்லமை கொண்டுள்ளார் என்ற உண்மையையும் நாம் எண்ண முடியும் (ரோமர் 4:21).*

*தேவன் கிறிஸ்துவுக்குள் நம்மை ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் ஆசீர்வதித்திருப்பதாக நாம் 1:3-14ல் வாசிக்கின்றோம். அது நமக்குத் தேவனுடைய வாக்குத்தத்தமாக உள்ளது, மற்றும் இந்த வாக்குத்தத்தத்தின் பெரும்பகுதி ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளது.*

*அவர் நம்மைத் தமது தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களினமாக (1:4) ஆக்கி, நம்மைத் தமது பிள்ளைகளாகச் சுவிகரித்துள்ளார் (1:6). அவர் நம்மை இயேசுவின் இரத்தத்தின் மூலமாக மீட்டு (1:7) நமக்குப் பாவமன்னிப்பை அருளியிருக்கின்றார் (1:7). அவர் தமது கிருபையின் ஐசுவரியத்தை நம்மீது பொழிந்திருக்கின்றார் (1:7, 8). அவர் தமது தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை நமக்கு அறிவித்து (1:10) நம்மைப் பரிசுத்த ஆவியினால் முத்திரையிட்டுள்ளார் (1:13).*

*நாம் நமது சுதந்தரத்தைப் பெற வருகையில் கிறிஸ்துவுக்குள் நாம் ஒருக்காலும் ஏமாற்றப்பட மாட்டோம் என்று தேவன் உறுதியளித்துள்ளார். "அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாய்" கொடுக்கப்பட்டுள்ளார் (1:14).*

*தேவன் தமக்கு என்றென்றும் மகிமை கொண்டு வருகிற நம்புதற்கரிய ஒரு சுதந்தரத்தைத் தமது மக்களுக்கு வாக்களிக்கின்றார்.*

## கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பது நமது சுதந்தரத்தின் தளத்தை விவரிக்கின்றது

*கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பதன் தனிச்சிறப்பு பற்றிப் பவுல் என்ன*

*கூறினார் என்பதைக் கவனியுங்கள். யூதக் கிறிஸ்தவர்கள் "அவருக்குள்" தெரிந்து கொள்ளப்பட்டிருந்தார்கள் (1:11, 12). அவர்களே "கிறிஸ்துவின்" மேல் முதலில் நம்பிக்கையாய் இருந்தார்கள் (1:11). புறஜாதி கிறிஸ்தவர்கள் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசித்த பொழுது (சபையில்) உள்ளடக்கப் பட்டார்கள் (1:13). அவர்களும் ''நமது சுதந்தரத்தின் அச்சாரமாய் அளிக்கப்பட்ட வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியானவரால் அவருக்குள் முத்திரையிடப்பட்டார்கள்" (1:13ஆ, 14ஆ).*

*1:11-14ல் பவுல் கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பதை வலியுறுத்தினார். உண்மையில், ''கிறிஸ்துவுக்குள்'' என்ற சொற்றொடரானது 1:3-14ன் உடனடி சந்தர்ப்பப் பொருளில் ஏதோ ஒரு வடிவில் ஒன்பது முறை உள்ளது. கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பது எல்லா மாறுபாட்டையும் ஏற்படுத்து கின்றது. இது நமது சுதந்தரத்தின் தளமாக உள்ளது.*

*நாம் சற்றே நன்கு நிதானித்து ஒரு முக்கியமான கேள்வியை எழுப் பலாம்: ஒரு நபர் எவ்விதம் கிறிஸ்துவுக்குள் பிரவேசித்து சுதந்தரத்தின் வாக்குத்தத்தத்தைப் பெறுகின்றார்?*

*உங்கள் வேதாகமத்தில் 1:3-4ன் ஓரப் பகுதியில் நீங்கள் பின்வரும் வேத வசனத்தைக் குறித்துக் கொள்ள விரும்பலாம்:*

> *கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனு ள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம் (ரோமர் 6:3, 4).*

*ஞானஸ்நானத்தில் நாம் கல்வாரிக்கு ஒரு பயணம் செல்லுகின்றோம். ஞானஸ்நானத்தில் நாம் கிறிஸ்துவுடன் சிலுவையின்மீது இணைந்து, அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகின்றோம். சிலுவையின் மீது இயேசு "முடிந்தது" என்று கூறியது போன்றே, ஞானஸ் நானத்தில் நமது முந்திய வாழ்வு முடிக்கப்படுகின்றது. ஞானஸ்நானத்தில் நாம் அவருடன் கல்லறையில் இணைகின்றோம். ஞானஸ்நானத்தில் நாம் புதிய வாழ்வுக்காக அவருடன் உயிர்த்தெழுதலில் இணைகின்றோம்.*

*நாம் விசுவாசத்தினால் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறுகின் றோம். அதுதான் "கிறிஸ்துவுக்குள்" இருப்பதை நாம் பெறுகிற வழிமுறை யாகும். அதன் மூலமாகத்தான் நாம், சுதந்திரம் உள்ளிட்ட ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களையும் பெற வருகின்றோம்.*

*நீங்கள் இரண்டு சத்தியங்களை ஞாபகப்படுத்திக் கொள்வதை நான் விரும்புகின்றேன். முதலாவது, கிறிஸ்துவுக்குப் புறம்பே, ஆக்கினைத் தீர்ப்பு மட்டுமே நாம் பெறக்கூடிய ஒரே ஒரு நித்திய விஷயமாக உள்ளது. இயேசு திரும்பி வரும் பொழுது, அவர் ''தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு*

(வருவார்). அவர்கள் ... நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (2 தெச. 1:7-10). இரண்டாவது, கிறிஸ்துவுக்குள், சுதந்திரம் மற்றும் நித்திய ஜீவன் உள்ளிட்ட ஆவிக்குரிய சகல ஆசீர்வாதமும் பெறப்படுகிறது. கிறிஸ்துவுக்குள் இருத்தல் என்பது நமது சுதந்திரத்தின் தளத்தை விவரிக்கின்றது.

## ஆவியானவரைப் பெறுதல் என்பது நமது சுதந்திரத்தின் நிச்சயத்தன்மையை நிலைநாட்டுகின்றது

"நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள் ... ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" (எபே. 1:13, 14). இது பரிசுத்த ஆவியானவரைப் பற்றிக் கூறுவது என்ன?

முதலாவது, பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்தவரின் வாழ்வில் முத்திரையாக இருக்கின்றார். (பத்திரப்) பதிவு முத்திரைகள் பற்றி நாம் அறிந்திருக்கின்றோம். பதிவாளராகப் பணிபுரியும் ஒருவர், ஒரு பத்திரத்தில் கையெழுத்திடப்படுவதைக் கவனித்து, பின்பு அப்பத்திரத்தின் அதிகாரத்து வத்தைக் குறிப்பிடுவதற்காகத் தமது முத்திரையை அந்தப் பத்திரத்தில் இடுகின்றார். ஜான் மெக்ஆர்தர் பின்வருமாறு விளக்கம் அளித்தார்,

> இவ்விடத்தில் பவுல் கூறுகின்ற முத்திரை என்பது ஒரு கடிதம், ஒப்பந்தம், அல்லது முக்கியமான மற்ற பத்திரங்கள்/ஆவணங்கள் மீது வைக்கப்படுகிற அலுவலக ரீதியான அடையாளத்தின் குறியைக் குறிப்பிடுகின்றது. முத்திரை என்பது வழக்கமாக ஒரு பத்திரத்தின் மீது சூடான/உருகிய மெழுகை வைத்து அதன் மீது முத்திரை மோதிரத்தை வைத்து அழுத்துவதாயிருந்தது.[2]

பழங்கால உலகத்தில் முத்திரை என்பது பின்வருபவனவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கருத்துக்களை அளிப்பதாயிருந்தது:

1. உரிமைத்துவம். முத்திரைகள் என்பவை விலங்குகள் அல்லது அடிமைகள் மீது அடையாளமாய்ச் செயல்பட்டன. அவைகள் உண்மையான உரிமையாளரைக் குறிப்பிடும் வகையில் புத்தகத்தின் மீதுள்ள முத்திரை போன்று இருந்தன. கிறிஸ்தவர் இப்பொழுது தேவனுடைய சொந்த உடைமையாய் இருக்கிறார் என்பதைச் சுட்டிக்காண்பிப்பதற்காகப் பரிசுத்த ஆவியானவர் அவருக்குள்/அவளுக்குள் வாசம் பண்ண வருகின்றார்.

2. பாதுகாப்பு. ஒரு பொருளின் மீது இடப்பட்ட அலுவலக முத்திரையானது, அந்த முத்திரையினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட நபர்களின் வல்லமை மற்றும் அதிகாரத்துவம் ஆகியவற்றினால் அந்தப் பொருள் பாதுகாக்கப்பட்டது என்று மக்களை எச்சரிக்கை செய்தது. இயேசுவின் கல்லறையைப் பிலாத்து முத்திரையிட்டார் (மத். 27:62-66). அவரது

முத்திரையானது கல்லை அசைக்கக் கூடாதென்று மக்களை எச்சரிக்கை செய்தது. அந்த எச்சரிக்கையானது பிலாத்துவின் அலுவலக ரீதியான பதவி மற்றும் அதிகாரம் ஆகியவற்றினால் பலப்படுத்தப்பட்டது. கிறிஸ்தவருக் குள்ளாகப் பரிசுத்த ஆவியானவர், தேவனால் இந்த நபர் காக்கப் பட்டுள்ளார் என்று சாத்தானுக்கும் பொல்லாங்கின் எல்லா வல்லமை களுக்கும் எச்சரிக்கை விடுக்கும் வகையில் செயல்படுகின்றார்.

*3. நம்பகத் தன்மை.* ஒரு முத்திரையானது தான் எதன்மீது காணப் படுகிறதோ, அந்தப் பொருளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தியது. கிறிஸ்தவருக்குள் இருக்கிற பரிசுத்த ஆவியானவர், அவர்/அவள் (கிறிஸ்தவர்) உண்மையிலேயே தேவனுடைய பிள்ளையாக, சுதந்தரத்திற்கு வாரிசாக இருக்கிறார் என்று உறுதிப்படுத்துகின்றது.

நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருந்தால், நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்பட்டுள்ளீர்கள். இது ஒரு சிறிய விஷயம் அல்ல. நாம் தேவனு டைய உடமையாய் இருக்கிறோம் என்றும், அதாவது நம்மைத் தேவன் தமது வல்லமையால் பாதுகாக்கின்றார், நாம் (அவரது) சுதந்தரத்திற்கு உண்மையான வாரிசுகளாய் இருக்கிறோம் என்றும் ஆவியானவர் உறுதிப் படுத்துகின்றார்.

பிறப்புச் சான்றிதழ்கள் முக்கியமான ஆவணங்களாய் உள்ளன அல்லவா? நாம் ஓட்டுநர் உரிமம் அல்லது திருமணச் சான்றிதழ் பெறுவதற்கோ, அல்லது, ஒரு வேலைக்கோ, கல்லூரியில் படிக்க இடத் திற்கோ விண்ணப்பிப்பதற்குப் பிறப்புச் சான்றிதழ்கள் நமக்குத் தேவைப் படுகின்றன. இந்த உலகம் முடிந்து, நாம் யாவரும் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு முன்பாக நிற்கின்ற பொழுது, தேவன் நம்மிடம் நமது பிறப்புச் சான்றிதழையோ அல்லது அடையாளப்படுத்தும் பிற ஆவணங் களையோ காண்பிக்கும்படி கேட்க மாட்டார். தேவன் (நம்மிடத்தில்) முத்திரை - பரிசுத்த ஆவியானவரின் முத்திரை - உள்ளதா என்று பார்ப்பார். ஆவியானவர் என்பவர் தேவனிடத்திலிருந்து வருகிற தனிச்சிறந்த முத்திரையாக இருக்கின்றார், தேவன் அவரை (ஆவியானவரை) கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு மட்டும் கொடுக்கிறார்.

இரண்டாவது, *பரிசுத்த ஆவியானவர் நமது சுதந்தரத்தை உத்தர வாதப்படுத்துகிற அச்சாரமாய் இருக்கின்றார்.* பரிசுத்த ஆவியானவரை ஒரு அச்சாரம் அல்லது உறுதிப் பொருள் (Gk.: *arrabon*) என்று பவுலின் எழுத்துக்கள் மூன்றுமுறை குறிப்பிடுகின்றன. 1:14ல் ஆவியானவர் நமது சுதந்தரத்தை உத்தரவாதப்படுத்தும் ‘‘அச்சாரம்’’ என்று விவரிக்கப் படுகின்றார். 2 கொரிந்தியர் 1:22 வசனம், ‘‘அவர் (தேவன்) நம்மை முத்தரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்’’ என்று குறிப்பிடுகின்றது, இது வர இருப்பது என்ன என்பதை உத்தரவாதப்படுத்தும் வகையில் உள்ளது, மற்றும் பவுல் 2 கொரிந்தியர் 5:5ல் “ஆவியென்னும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும் அவரை (தேவனே)” என்று மீண்டும் வலியுறுத்தினார்.

பவுல் (இவ்விடங்களில்) பயன்படுத்திய வார்த்தையானது அவரது நாட்களில் ஒரு முன் பணத்தை அல்லது முன் செலுத்துகையைக்

*குறிப்பதற்கான பொதுவான வார்த்தையாகப் பயன்படுத்தப்பட்டது. அது, ஏதாவது ஒன்றை வாங்கும் விலையில் ஒரு பகுதியாக இருந்தது. அது, (மொத்த கட்டணத்தின்) எஞ்சிய பகுதியானது ஏற்ற வேளையில் கிடைக்கப் பெறும் என்பதை உறுதிப்படுத்திற்று.*

*பரிசுத்த ஆவியானவர், நமது சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார் என்பது உண்மையில் எதனை அர்த்தப்படுத்துகின்றது? தேவன், தம் பிள்ளைகளுக்கு முன் குறித்து வைத்துள்ள நம்புதற்கரிய சுதந்தரத்தை நாம் பெறுவோம் என்று நம்பிக்கையுடன் நாம் இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். இது, ''அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய'' சுதந்திரமாக "பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது" (1 பேது. 1:4, 5).*

*இப்பொழுது நாம் கிறிஸ்துவுக்குள் கொண்டுள்ளவைகள் இனி வர இருப்பவைகளுக்கு முன் சுவையாக மட்டுமே உள்ளது என்று நாம் காணும் படிக்கும் தேவன் விரும்புகின்றார். உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று நீங்கள் அறிந்த பொழுது நீங்கள் கொண்டிருந்த அகமகிழ்வைப் பற்றி நினைத்துப் பாருங்கள். பிற கிறிஸ்தவர்களுடன் தேவனுக்கு நீங்கள் ஆராதனை செய்யும் வேளையின் போது நீங்கள் அனுபவிக்கும் ஆச்சரியத்தை நினைத்துப் பாருங்கள். இந்த வேளை வரைக்கும் உங்கள் வாழ்வில் தோன்றியுள்ள அன்பு, சந்தோஷம், சமாதானம் மற்றும் ஆவியின் கனி ஆகியவைகளைப் பற்றி நினைத்துப் பாருங்கள். நீங்கள் தேவனுடைய பிள்ளையானதிலிருந்து தேவன் உங்கள் வாழ்வில் செய்துள்ள எல்லா வற்றையும் மற்றும் மீண்டும் மீண்டுமாக அவற்றைப் பெருக்கியுள்ளதையும் நினைத்துப் பாருங்கள். அப்பொழுதும் கூட நீங்கள் தேவன் உங்களுக் கென்று வைத்துள்ளவற்றின் நிறைவைக் கற்பனை செய்வதில் குறைவு படுவீர்கள்.*

*பினேயாஸ் தனது நிலத்தைக் கண்டதும் ஒன்றுமற்றுப் போனது போலக் கிறிஸ்தவர்கள் ஆக மாட்டார்கள். வாழ்வானது ஒரு மோசமான நகைச்சுவையாகவோ அல்லது ஒரு பெரிய ஏமாற்றமாகவோ ஆகிவிடாது. நாம் இப்பொழுது கிறிஸ்துவுக்குள் கொண்டுள்ள யாவும் ஒரு அச்சார மாகவே உள்ளது. இது தேவன் நமக்கு வாக்களித்துள்ள நம்புதற்கரிய சுதந்தரத்தின் சிறு துணுக்காகவே உள்ளது.*

## தேவனைத் துதித்தல் என்பது நமது சுதந்தரத்தின் இலக்கை அடையாளப்படுத்துகின்றது

*"அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சி யாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" (1:14). 1:3-14ல் பவுலின் வார்த்தைகள் தேவனுக்குப் புகழ்ச்சியுடன்/துதியுடன் ஒலிக்கின்றன. ''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்'' (வ. 3). வசனம் 6, தேவனுடைய மகிமையுள்ள கிருபைக்குப் புகழ்ச்சியை அளிக்கின்றது. வசனம் 11 ''அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியை'' குறிப்பிடுகின்றது. வசனம் 14, மீட்பின் நோக்கத்தை இரட்சிப்பின்*

நோக்கத்தை, கிறிஸ்துவுக்குள் இருக்கின்றவர்களைத் தேவன் தமது சொந்த உடமையாக்கும் நோக்கத்தை, மற்றும் "அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சி" என்பது அவர்களுக்குத் தரப்பட்டுள்ள முழுமையான சுதந்தரத்தின் நோக்கமாய் உள்ளது என்பதை எடுத்துரைக்கின்றது.

தொடக்கத்தில் தேவன், "நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" (ஆதி. 1:26) என்று கூறினார். தேவன் தமது மகிமையை, தமது பண்பை மற்றும் தமது இயல்பை வாழ்வில் காண்பிக்கும் மக்களைப் படைக்க நோக்கங் கொண்டார். மக்கள் தம்மைத் துதிக்கின்ற, தமக்கு ஊழியம் செய்கின்ற மற்றும் தம்மைப் போல இருக்கப் பிரயாசப்படுகின்றவர்களாயிருக்கும்படிக்கு அவர் விரும்பினார்.

இருப்பினும், பாவம் என்பது உடன் வந்தது, மனிதனில் இருந்த தேவ சாயலை உருக்குலைத்தது. வேதாகமத்தின் முழு வரலாறும், தேவனுடைய முழுத் திட்டமும் நம்மை தேவன் ஆதியில் நமக்கு நோக்கங் கொண்டிருந்த விஷயத்திற்குப் பின் திருப்பிச் செலுத்தியுள்ளது. இதை அவர், நம்மை மீட்டதினால், நம்மை இரட்சித்ததினால், மற்றும் கிறிஸ்துவுக்குள் நம்மை மறுபடி சிருஷ்டித்ததினால் நிறைவேற்றுகின்றார்.

நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்காக சிருஷ்டிக்கப் பட்டோமோ, அதுவே - தேவசாயல் என்பதுவே - நமது சுதந்தரமா யிருக்கின்றது. அது ஒரு நாளில் நடந்தேறும். "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமா யிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப் படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" (1 யோவா. 3:2). அது நடந்தேறும்பொழுது, நாம் துதித்து ஆரவாரமிடுவோம்! தேவனைத் துதித்தல் என்பது நமது சுதந்தரத்தின் இலக்கை அடையாளப் படுத்துகின்றது.

## முடிவுரை

எதிர்காலத்திற்கான நம்பிக்கையை விட்டுவிடாதிருங்கள். ஒருவருமே நம்பத் தகுந்தவர்களல்ல, நம்பிக்கைக்குத் தகுதியானவர்களல்ல அல்லது நம்பிக்கைக்கு உரியவரல்ல என்பது போலத் தோன்றலாம்; ஆனால் தேவன் இருக்கிறார். அவர் உண்மையுள்ளவராய் இருக்கிறார் என்பதை அவரே (தேவனே) உங்களுக்கு நினைவூட்டுவாராக. சர்வ வல்லமையுள்ள தேவன், கிறிஸ்துவுக்குள் ஒரு நம்புதற்கரிய, நித்திய சுதந்தரத்தை நமக்கு உத்தரவாதப்படுத்துகின்றார். நிறைவாக அதை நீங்கள் பெறும்பொழுது நீங்கள் நித்தியத்திற்கும் தேவனைத் துதிக்கவும் நன்றிகளைச் செலுத்தவும் விரும்புமளவுக்கு இது ஒரு அற்புதமிக்க சுதந்தரமாக உள்ளது!

---

குறிப்புகள்

[1]Max Lucado, *He Still Moves Stones* (Dallas: Word Publishing, 1993), 84-85. [2]John MacArthur, Jr., *Ephesians,* The MacArthur New Testament Commentary (Chicago, Ill.: Moody Press, 1986), 34.